மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவைகளைப் பற்றியெல்லாம் சொல்வது சரியல்ல. The Hon. Minister has given an assurance that he will look into your grievance. பேப்பர்ஸை கேட்கிறார்கள், கொடுத்துவிடுங்கள்.

(ஈ) திருப்பூர் சோமசுந்தரம் டெக்ஸ்டைல்ஸ் மில்லுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டதும் தொழிலாளர் வேலை பாதிக்கப்பட்டதும் குறித்து.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, திருப்பூர் சோமசுந்தரம் டெகஸடைல்ஸ் மில்லுக்கு 20–11–74-ம் தேதி முதல் மின்சாரம் துண்டிக்கப்பட்டு, அதில் பணியாற்றும் தொழிலாளர்கள் வேலை பாதிக்கப்பட்டுள்ளது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பேரவைத் தலைவர் அவர்களே, 1910ஆம் ஆண்டு இந்திய மின்சாரச் சட்டத்தின் 28-வது பிரிவின்படி உரிமைதாரர் அன்றி வேறு எவரும் மாநில அரசின் முன் அனுமதி இன்றியும் மாநில அரசு இது குறித்து முடிவு செய்கின்ற நிபந்தனைகளையொட்டியும் அன்றி மற்றப்படி பொதுமக்களுக்கு மின்சாரம் வழங்குவதில் ஈடுபடக் கூடாது. இதற்கு மாறாக, செய்து கொள்ளும் எந்த ஒப்பந்தமும் செல்திறனற்றதாகும். விதி முறைகளையொட்டியன்றி மற்றப்படி ஒதுக்கப்பட்ட மின் இணைப்புக்களையும், மின் ஏற்பாட்டின் மேற்பார்வை பொறியாளர் கருத்துப்படி மின்சாரத்துறையின் நலனுக்குப் பாதகமான முறையில் பயன்படுத்தி இருந்தால் அந்த மின்சாரத்தையும் துண்டித்துவிட மின்வாரியத்திற்கு உரிமை உண்டு.

கோயம்புத்தூர் மின்சார உதவி ஆய்வாளர், திருப்பூர் திருவாளர்கள் சாத்தப்பா டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தை 1956 ஆம் ஆண்டு இந்திய மின்சார விதிகளைச் சேர்ந்த 46-விதியின் கீழ், 20–9–74 அன்று பார்வையிட்டபோது, உயர் அழுத்த மின் சக்தியைப் பயன்படுத்தும் மேற்சொன்ன நிறுவனம், திருவாளர்கள் சோமசுந்தரம் டெக்ஸ்டைல்ஸ் என்னும் மற்றொரு நிறுவனத்திற்கு அனுமதியின்றி மின்சக்தி வழங்கியதாக கண்டு பிடிக்கப்பட்டது. உடனே இது குறித்து மின்வாரிய மேற்பார்வைப் பொறியாளர்கள் கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டது. மேற்சொன்ன ஏற்பாட்டிற்கு அரசிடமிருந்து அனுமதி எதுவும் பெறப்பட்டதா என்று தெரிவிக்குமாறு உயர் அழுத்த மின்சக்தியைப் பயன்படுத்தும் திருவாளர்கள் சாத்தப்பா டெக்ஸ்டைல்ஸ் நிறுவனமும் திருவாளர்கள்

சோமசுந்தரம் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனமும் கேட்கப்பட்டனர். இதற்கு அவர்கள் இதுவரை பதில் அளிக்கவில்லை. இதற்கிடையில் மேற்சொன்ன ஏற்பாடு இந்திய மின்சாரச் சட்டத்திற்கும், மின்வாரிய நிபந்தனைகளுக்கும், வரையறைகளுக்கும் மீறியதாக இருப்பதால் மேற்சொன்ன அனுமதியற்ற மின்சக்தி இணைப்பை நிறுத்திவிடுமாறு திருவாளர்கள் சாத்தப்பா டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்திற்கு எடுத்துக் கூறப்பட்டது. அவ்வாறே திருவாளர்கள் சாத்தப்பா டெக்ஸ்டைல்ஸ் நிறுவனம், சோமசுந்தரம் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்திற்கு 20-11-74 லிருந்து மின்சக்தி வழங்குவதை நிறுத்திவிட்டது.

எனினும், தனிப்பட்ட மின் இணைப்பிற்கு கோயம்புத்தூர் பைகாரா மின்சக்தி ஏற்பாடு மேற்பார்வைப் பொறியாளருக்கு, விண்ணப்பிக்குமாறு திருப்பூர் திருவாளர்கள் சோமசுந்தரம் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்திற்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி: இதில் இருக்கிற இரண்டு முதலாளிகளுக்கும் இடையே உள்ள தகராறு காரணமாக ஆறு மாத காலமாக அந்த மில் மூடப்பட்டு அதில் பணியாற்றுகிற தொழிலாளர்களின் வேலை பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதை மனதில் கொண்டு விரைவாக அவர்களுக்கு மின்சாரம் கொடுத்தால்தான் அங்குள்ள தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும். ஆகவே அதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இரண்டு முதலாளிகளும் சேர்ந்து மின்சாரத் துறையை ஏமாற்றி வந்திருக்கிறார்கள் என்பது இந்த விவரத்தில் இருந்து தெரிகிறது. முறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு நிறுவனம் இன்னொரு நிறுவனத்திற்குக் கொடுக்க வேண்டாம் என்கிறார்கள். முறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஏதாவது கஷ்டம் இருந்தால் அவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. விண்ணப்பித்தால் பரிசீலித்து நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(7) அறிக்கை அளித்தல்.

மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள்.

THIRU THOPPUR THIRUVENGADAM: Sir, I rise to present the reports of the Committee on Estimates on the Jail Department, Co-operative Sugar Mills and Compensation and assignment to local bodies and Panchayat Raj institutions.